# சுதந்திரன்

SUTANTIRAN

விலை: சதம் 60. தொலைபேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2006, வைகாசி 18, ஐ:அவ் 20 (1-6-75) ஞாயிறு புத்தகம் 28, இதழ் 44



## சுடர்

வைகாசி இதழ்
இப்போது
விற்பனையாகிறது!

- கவிஞர் காசி ஆனந்தனின் 'சிறைச்சாலை இனிக்கும்'
- கலைஞர் கருணாநிதி, கவிஞர் சுரதா, கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோரின் தித்திக்கும் முத்தான கவிதைகள்!
- நான்கு சிறு கதைகள்—
- 'தாம்பத்திய உறவு'— உளவியல் கட்டுரை!
- நடிகவேள் எம். ஆர். ராதாவின் பதில்!

மற்றும் வைத்தியக் குறிப்புக்கள், மாதர் குறிப்புக்கள், சுவையான துணுக்குகள் ஆகியவற்றைத் தாங்கி மலர்ந்துள்ளது **சுடர்!**

விலை ரூபா 1-00

சுதந்திரன் விற்பனையாளர்கள் எல்லோரிடமும் கிடைக்கும்.


# ஈழ விடுதலைப் பாசறைகள் உலகெங்கும் உருவாகின்றன!

## தியாகி சிவகுமாரன் நினைவாக அமெரிக்காவில் தமிழர் விழா!

தமிழ்ஈழத்தின் விடுதலைக் குரல் உலகநாடுகள் எங்கும் இப்போது வேகமாக எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்துக்குஉதவுவதற்கான விடுதலைப் பாசறைகள் ஆங்காங்கே உருவாகி வருகின்றன.

அண்மையில் இலண்டனில் உருவாகி இன்று உலகின் கவனத்தையெல்லாம் தன்பால் ஈர்த்துவரும் 'ஈழவிடுதலை முன்னணி' அமெரிக்காவிலுள்ள தமிழ் இயக்கங்களையும் தன்பால இழுக்கத் தவறவில்லை. மே முதல் வாரத்தில் டிட்ரொயிற்றில் கூடிய வட அமெரிக்க தமிழ் இயக்கங்களின் கூட்டுக் கமிட்டி (அமெரிக்க தமிழ் பண்பாட்டுக் கழகம், ஈழத் தமிழகத்தின் விடுதலைக்கான அகில உலகத்தமிழர் இயக்கம், கனடா தமிழ்ச் சங்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது) இவ்வியக்கங்களைக் கலைத்துவிட்டு 'ஈழவிடுதலை

—4-ம் பக்கம் பார்க்க

● முற்போக்கு எழுத்தாளர் முகத்தில் கரிப்பூச்சு!

# மாநாட்டில் கலந்துகொள்ள பிரதமர், ஜனாதிபதி மறுப்பு!

12 அம்சத்திட்டத்தின் அடிப்படையில் "தேசிய ஒருமைப்பாட்டை" உருவாக்குவதற்கென சிங்கள ஏகாதிபத்தியத்தின் வால்பிடிகளான முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் இவ்வார இறுதியில் கொழும்பு பண்டாரநாயகா ஞாபகார்த்த மண்டபத்தில் நடத்தப் போவதாக அறிவித்துள்ள மாநாட்டில் தம்மால் பங்குபற்றவோ மாநாட்டை தொடக்கி வைக்கவோ முடியாது என பிரதமரும் ஜனாதிபதியும் இறுதிநேரத்தில் முற்றாக மறுததுவிட்டதாக அறியப்படுகிறது. இதன் மூலம் தமிழ் மக்களை ஏமாற்ற முனைந்த முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் முகத்தில் முறையாக கரிபூசப்பட்டுவிட்டதாகவும் இவர்கள் முன்வைத்துள்ள 12 அம்சத்திட்டத்தை பிரதமர் ஏற்க மறுத்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

பிரதமரும் ஜனாதிபதியும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள முடியாது' என

## கடைசி செய்தி!

12 அம்சத்திட்டம் முழுமையாக மாற்றியமைக்கப்பட்ட பின்னர் — மூன்று அமைச்சர்களின் வற்புறுத்தலின் பேரில்—மாநாட்டில் கலந்துகொள்ள பிரதமர் சம்மதம் தெரிவித்தாராம்.

## 'ஒரிஜினல்' 12 அம்சத் திட்டத்துக்கு இறுதி நேரத்தில் அரோகரா!


கடைசிநேரத்தில் கைவிரித்துவிட்ட செய்தியை அரசாங்க கெசட் ஆக வெளிவரும் ஏரிக்கரை நிறுவனத்தின் 'தினமின' என்ற சிங்கள ஏடு தனது 28-5-75 இதழில் பிரசுரித்திருக்கிறது. இதே வேளையில் இந்தச் செய்தி தமிழ்ப்பத்திரிகைகளில் பாட்டும் வெளிவராது திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளதாம்.

பிரதமரும், ஜனாதிபதியும் கைவிரித்த பின்னர் ஒருமைப்பாடு மாநாட்டினர் அமைச்சர் இலங்கரத்தினு

—5-ம் பக்கம் பார்க்க

## வீரகேசரி நிருபரிடம் பறிமுதல்!

மே 22 — யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சட்ட மறுப்பு போராட்டத்தின் போது கொழும்புப் பத்திரிகை நிருபர் ஒருவரின் குறிப்புப் புத்தகமொன்றை பொலிஸ் அதிகாரி ஒருவர் பறித்து கிழித்து எறிந்ததாக நாளேடுகளில் செய்தி வெளிவந்ததல்லவா? பொலிசாரால் பாதிக்கப்பட்ட அந்த நிருபர் வேறு யாருமல்ல—வீரகேசரி ஏட்டின் பழம்பெரும் நிருபரான திரு. செல்லத்துரை அவர்கள் தான்!



படப்பிடிப்பு:- ஏ. வி. மகாலிங்கம்

சிங்களக் குடியரசு நாளில் தமிழ் ஈழத் தலைநகரான யாழ்ப்பாணம் கொந்தளிக்கும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● 500 பொலிசார் குண்டாந்தடி, துப்பாக்கி, கண்ணீர்ப்புகைக் குண்டுகளுடன் சூழ்ந்து நிற்க

# கொதிக்கும் வெய்யிலில் உருகியோடும் தார் வீதியில் 4 மணி நேரம் நடைபெற்ற சட்ட மறுப்பு

**குடியரசு நாளான மே 22-ம் நாள் மிகவும் கொந்தளிப்பான சூழ்நிலையில்-குண்டாந்தடிகள், கண்ணீர்ப்புகைக்குண்டுகள், துப்பாக்கிகள் சகிதம் சுமார் 500க்கு மேற்பட்ட பொலிசார் சுற்றிவர வளைத்து நிற்க - யாழ்ப்பாணத்தில் நான்கு மணி நேரம் கட்டுப்பாட்டுடன் நடைபெற்ற சட்டமறுப்பு, தமிழர்களின் உறுதிக்கும், ஒற்றுமைக்கும், தியாக உணர்வுக்கும் எடுத்துக்காட்டாகவும் அடுத்து நடைபெறவிருக்கும் தீவிர சட்ட மறுப்பு இயக்கங்களுக்கு ஒரு பயிற்சிக்களமாகவும் அமைந்திருந்தது!**

எதற்கும் தயாரான நிலையில்—உணர்ச்சியும் உத்வேகமும் அலைபுரள — கொதிப்பேறிய உள்ளங்களுடன் எரிமலைபோல இந்த சட்ட மறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள், மூதறிஞர் செல்வா அவர்களின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு அமைதியுடன் பொறுமையைக் கடைப்பிடித்த பாங்கைக்கண்டு உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகளே மூக்கின்மேல் விரல் வைத்து அதிசயித்தனர்.

பிரதான வீதியிலுள்ள தமிழர் கூட்டணி அலுவலகத்திலிருந்து மூதறிஞர் தலைமையில் யாழ் முற்றவெளி நோக்கிப் புறப்பட்ட சட்டமறுப்பு ஊர்வலத்தை பிலிப் மருத்துவமனைக்கு அருகில் முன்வேலியிட்டு பொலிசார் தடைசெய்தும் — சட்டமறுப்பு புதிய வடிவம் எடுத்தது. தடுக்கப்பட்ட அதே இடத்தில் கொதிக்கும் வெய்யிலில் உருகியோடும் தார் வீதியில் அப்படியே தந்தை செல்வா அமர, 5000க்கு மேற்பட்ட தொண்டர்களும் பொது மக்களும் அப்படியே தெருவை மூடி அமர்ந்து கொண்டனர். இதன் மூலம் — அரசாங்கத்தின் போக்குவரத்து சட்டத்தை மீறி தமிழர் கூட்டணியின் சட்ட மறுப்பு இயக்கம் உருவெடுத்தது.

## போராட்டத்தில் அஞ்சாநெஞ்சுடன் 300 பெண்கள் பங்கேற்ற காட்சி!

ஆர்வப் பெருக்குடன், இந்த ஊர்வலத்தில் துணிச்சல் மிக்கவர்களாக 300க்கு மேற்பட்ட தமிழ் பெண்கள், — கிழவிகள், இளம் பெண்கள், பள்ளி மாணவிகள் உட்பட — கலந்து கொண்டது வரலாற்றில் ஒரு பெரிய திருப்பு முனையாகும் பெண்கள் அணிக்கு திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரையும், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் தலைமை தாங்கினர்.

## கடமை, கண்ணியம் கட்டுப்பாடு தவறாத தமிழர் பெரும்படையின் எழுச்சி!

சட்டமறுப்பில் ஈடுபட்டிருந்த தொண்டர்களுக்கு கொதிக்கும் வெய்யில் — மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும், வீங்கிள வேனிலுமாக தோன்றியது.

### முதுகிழவர்

இந்த சட்டமறுப்பு ஊர்வலத்தில் உடல் சுகவீன முற்ற நிலையிலும் — மருந்து குடித்தபடியே — 90 வயது முதுகிழவர் ஒருவரும் பங்கு பற்றியது பலரது கவனத்தையும் கவர்ந்தது. இந்தக் கிழவர் கூட்டணிக் காரியாலயத்தில் இதற்காக இரண்டு நாட்களாக பருத்தித்துறையிலிருந்து வந்து காத்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தளபதி பிரகடனம்

சட்டமறுப்புத் தொண்டர்கள் மத்தியில் தமிழர் கூட்டணித் தளபதி அ. அமிர்தலிங்கம் தமிழ் ஈழம் பிரகடனம் ஒன்றை வாசித்தார். அந்தப் பிரகடனத்தை திரு. அமிர்தலிங்கம் எடுத்துச்சொல்ல கூடி நின்ற மக்களும் ஏனைய தலைவர்களும் உணர்ச்சியுடன் திருப்பி சொன்னகாட்சி உணர்ச்சிவசப்படும்படியாக இருந்தது.

### தலைவர்கள் விடுதலை முழக்கம்!

சட்டமறுப்புத் தொண்டர்களுக்கு மத்தியில் குடியரசு அரசியலமைப்பைக் கண்டித்தும் தமிழ் ஈழ விடுதலையை வலியுறுத்தியும் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், சே. மா. செல்லத்தம்பு பா. உ., திருமதி. அமிர்தலிங்கம், சு. நடராசா, வி. ஆனந்தசங்கரி பா. உ., சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன், எஸ். கே. மகேந்திரன், மு. ஆலாலசுந்தரம், மதிமுகராசா ஆகியோருட்பட பலர் உணர்ச்சி பொங்கும் உரைகளை நிகழ்த்தினர்.

### விடுதலைக் கீதங்கள்

இதையடுத்து கவிஞர் காசிஆனந்தனின் உணர்ச்சிப்பாடல்களையும், தமிழ் ஈழத்தின் தேசிய கீதத்தையும் மற்றும் எழுச்சிக் கீதங்களையும் இசைத்தபடி சட்ட மறுப்பில் தொண்டர்கள் ஈடுபட்டிருந்தனர்.

கறுப்புக்கொடிகள், பென்னம்பெரியபானர்கள், உதயசூரியன் கொடிகள், விடுதலை முழக்கங்களை தாங்கிய சுலோக அட்டைகள், தமிழ் ஈழ நாட்டையும், சிங்கள நாட்டையும் இருவேறு நாடுகளாக பிரித்துக் காட்டும் படங்கள் ஆகியவற்றை தொண்டர்கள் கைகளில் வைத்திருந்தனர்.

பகல் 1.30 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை தொடர்ந்து 4 மணி நேரமாக நடைபெற்ற சட்டமறுப்பு போராட்டத்தின் முடிவில் தந்தை செல்வா அவர்கள் பேசும் போது பின்வருமாறு கூறினார் :—

"நாம் இன்று நடத்திய இந்தச் சட்டமறுப்பு போராட்டத்தில் பெருந்திரளான மக்கள் பங்கு பற்றியதையிட்டு நான் பூரிப்படைகிறேன். இன்று நாம் நடத்தியது ஓர் அடையாள சட்டமறுப்புத்தான். இன்றைய சட்டமறுப்பிலிருந்து இனிமேல் நாம் நடத்தவிருக்கும் பெரிய சட்ட மறுப்பு இயக்கங்களுக்கு பல பாடங்களை நாம் படித்துக் கொள்ள வேண்டும். இனிமேலும் தொடர்ந்து பல சட்டமறுப்புக்களை நடத்துவதற்கு எமக்கு தருணம் கிடைக்கும். இன்று படித்த பாடங்களைக் கொண்டு அடுத்த சட்டமறுப்பை இன்னும் சீராகவும், இறுக்கமாகவும் நடத்துவதற்கு நாம் திட்டமிடுவோம்!"

# யாழ். மாநகர ஊழியர் சங்க கூட்டத்தில் அடிதடி!

## தனது கையாட்களை தெரிவுசெய்ய மேயர் செய்த சதி முறியடிப்பு!

யாழ் மாநகர, ஊழியர் சங்க வருடாந்தக் கூட்டம் குழப்பத்தில் முடிவடைந்தது. குழப்பத்தின் போது கைபரிமாறப்பட்டதில் மின் நிலைய ஊழியர் ஒருவர் தலையில் பலத்த இரத்தக் காயம் ஏற்பட்டது. தமது உடன் ஊழியருக்கு இழைக்கப்பட்ட கொடுமையைச்சகிக்க மாட்டாத மின் நிலைய ஊழியர் அணிதிரண்டு நகர மண்டபகாணியை முற்றுகையிட்டனர். சம்பந்தப்பட்ட ஊழியரைத்தாக்கியதாகச்சொல்லப்படும் யாழ். மேயரின் கையாட்கள் பேடிகள் போன்று ஓடி ஒதுங்கியிராவிட்டால் என்ன சம்பவித்திருக்கும் என்பதை யாரும் கற்பனை செய்ய முடியாது.

யாழ். மாநகர ஊழியர் சங்க வருடாந்தக் கூட்டம் கடந்த வருடமே நடைபெற்றிருக்கவேண்டும் உத்தியோகத்தர் பதவிகளுக்குச் சங்கத்தின் அங்குரார்ப்பண கூட்டத்தில் மேயரால் நியமிக்கப்பட்டவர்கள் தேர்தல் மூலம் பதவிகளை இழக்க நேரிடும் என்பதால் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் திகதி நிர்ணயிக்கப்பட்டபின் ஏற்கெனவே பல தடவைகள் பின்போடப்பட்டது.

தொழில் சங்கப் பதிவின்படி வருடாந்தக்கூட்டத்தை கூட்டாத காரணத்தால் இயக்கம் இழந்து காலவதியாகிவிட்ட ஊழியர் சங்கத்தை மீண்டும் இயக்க நிலைக்குக் கொண்டுவர வருடாந்தக் கூட்டத்தைக் கூட்ட வேண்டிய நிர்ப்பந்தம் பதவிகளில் ஒட்டிக் கொண்டிருந்த மேயரின் கையாட்களுக்கு ஏற்பட்டது. ஆகவே பெயருக்கு வருடாந்தக் கூட்டம் கூட்டப்பட்டது.

மேயர் தமக்குப் பிடித்த மானவர் சிலரை உத்தியோகத்தர் தேர்தலில் போட்டியிட தேர்தலுக்கு நிறுத்தினர். அவர்களுக்கு ஆதரவு தேடத் தமது மேயர் பதவியையும் துஷ்பிரயோகம் செய்தார். இரகசிய வாக்கெடுப்பு உரிமை கூட ஊழியருக்கு மறுக்கப்பட்டது. எதிர் வேட்பாளர்களைத் தேர்தலில் இருந்து விலகுமாறு வற்புறுத்தின[illegible] பட்டு வராதபோது [illegible] வேட்பாளர் பெயர்களை பிரேரித்த ஆமோதித்தவர்களை வெருட்டி அவர்களது கையொப்பங்களை வாபஸ் பெறுமாறு அடம்பிடித்தார். இத்தனை தில்லுமுல்லு நடவடிக்கைகள் மத்தியிலும் பெரும்பாலான மாநகர ஊழியர் மேயரின் நியமனம் பெற்றவர்களை வெளிப்படையாகவே எதிர்க்கமுற்பட்டனர். தேர்தல நடைபெறின் மேயாது கையாட்கள் படுதோல்வி அடைவர் என்பது உறுதியாகியதும் கூட்டம் குழப்பப்பட்டது. சங்க உத்தியோகத்தர் அமருவதற்காகப் போடப்பட்ட கதிரைகளும் மேசையும் அப்புறப்படுத்தப்பட்டன. அதை அகற்றியவர்கள் தாக்கப்பட்டனர். தொடர்ந்து ஒரே அல்லோலகல்லோலம். இவையெல்லாம் நடைபெற்றபோது ஒதுங்கிக் கொண்ட மேயர் குழப்பம் அடங்கிய பின்பே நகர மண்டபத்துக்கு வந்தார். கூட்டரசாங்கக்கட்சி ஆதரவாளர் மத்தியிலேயே ஏற்பட்ட பதவிப் போட்டி [illegible] வருடாந்தக் கூட்டமே ஆரம்பத்திலேயே குழப்பத்தில் முடியக் காரணமென்று பொது மக்கள் பேசிக்கொள்கின்றனர். தமது கையாட்களைத் திருப்திப்படுத்த எதிர் வேட்பாளராக முன்னின்ற ஊழியர் சிலரை மேயர் வேலைநீக்கம் அல்லது தற்காலிக வேலைநீக்கம் செய்யலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மாநகர ஊழியர் சங்கத்தில் ஏற்பட்ட வெடிப்பு பதவியில் உள்ள கூட்டரசாங்கக் கட்சிகள் மத்தியில் மோதலை ஏற்படுத்தினும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

யாழ். மாநகர சபையில் வருடாந்தக் கூட்டங்களை கிரமமாக நடத்த அமைப்பு மாநகர ஊழியர் தொழிற் சங்கம் மட்டுமல்ல யாழ் மாநகர ஊழியர் பொழுது போக்குச் சங்கம், மாநகர ஊழியர் கூட்டுறவுச் சிக்கன சேமிப்புச் சங்கம் ஆகியவையும் வருடக்கணக்காக வருடாந்தக் கூட்டங்களை நடத்தாது இழுத்தடித்து வருகின்றன. அங்கத்தவர் பணம் கையாடப்பட்டிருந்தாலும் இதற்கான ஒரு காரணமாக விருக்கலாமென்று பேசிக் கொள்ளப்படுகிறது. அமைச்சு மாநகர ஊழியர் அமைப்புக்கள் குறித்து பூர்வாங்க விசாரணை நடத்தினால் பல மோசடிகள் அம்பலமாகலாம்.

தொழிற்சங்கக் கணக்குகள் தத்துவம் பெற்ற கணக்குப் பரிசோதனையாளரால் பரிசோதிக்கப்பட வேண்டுமென சட்டம் விதிக்கிறது. யாழ். மாநகர ஊழியர் தொழிற்சங்க கணக்குகள் அப்படியல்லாது சங்க உறுப்பினர் ஒருவரால் மட்டுமே பரிசோதிக்கப் பட்டிருந்ததும் உறுப்பினர்களது ஆட்சேபனைக்கும் எதிர்ப்புக்கும் பிரதான காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுந்தது காண் தமிழர் பெரும்படை!

அன்பு நண்பா,

எத்தனை ஆண்டுகள் சென்றிடினும்—இன்னல்கள் கோடி சூழ்ந்திடினும்—கொத்தடிமை நிலை துடைத்திடுவோம்; கொடுங்கோலாட்சியை வீழ்த்திடுவோம். சத்தியப் போரினைத் தொடர்ந்திடுவோம்; தமிழ்த்தாயக மண்ணினை மீட்டிடுவோம்; இத்தரை மீது பௌத்த சிங்கள—ஏகாதிபத்தியத்தை மாய்த்திடுவோம்; என்று எழுச்சிப்பண் இசைத்தபடி என் தமிழ்க்குலத்தார்— மே 21, 22ம் நாட்களில் தமிழ் ஈழமெங்கும் நடைபெற்ற ஹர்த்தாலின் போதும் யாழ்நகரில் நடைபெற்ற சட்டமறுப்பு போரரட்டத்தின்போதும் காட்டிய தீவிரத்தை — ஒற்றுமையை — தியாக வீரத்தை — செயலூக்கத்தை — கட்டுப்பாட்டை—எப்படிப் புகழ்ந்திடுவேன்? என் சொல்லிப் பாராட்டுவேன்? அதிலும் எங்கள் இளைஞர்கள் — என் அன்புத் தம்பி தங்கைகள்—இதய வீட்டில் குடியிருக்கும் எனதருமை உடன் பிறப்புக்கள்—மாணவ மாணவிச் செல்வங்கள்—இந்த இரண்டு நாள் இயக்கங்களின் போதும் காட்டிய ஈடுபாட்டையும் அவர்கள் உள்ளத்தில் பொங்கியெழுந்த வீர விடுதலை உணர்ச்சியையும் — 'செய் அல்லது செத்துமடி' என்கிற அந்தக் கர்மவீரத்தையும்—நான் நேரடியாகவே கண்டு இதயம் பூரித்துப்போயிருக்கிறேன்! நம்முடைய இளைஞர்கள் மத்தியில் மூண்டெழுந்துள்ள இந்த வீர விடுதலைக் கனலை — விடுதலைப் பேராவேசத்தினை கண்டபோது 'ஜெயமுண்டு பயமில்லை மனமே''— என்று என் உள்ளம் மகிழ்ந்து கூத்தாடியது!

ஆம் நண்பா, தமிழினத்தால் முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்டுவிட்ட புதிய சிங்கள பௌத்த ஏகாதிபத்திய அரசியல் சட்டம்—தமிழ் மக்கள் மீதும், தமிழ்ஈழத் திருநாட்டின் மீதும் பலவந்தமாக துப்பாக்கிமுனையில திணிக்கப்பட்ட 'மே 22ம்' நாளுக்கு முதல் நாளான மே 21ல், தமிழர் விடுதலைப்பேரியக்கமான தமிழர் கூட்டணியின் ஆணைப்படி-தமிழ் ஈழமடங்கிலும் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்த கடையடைப்பும், பாடசாலைப் பகிஷ்கரிப்பும் தமிழ் சமுதாயத்தின் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும், விடுதலை வேட்கையையும் — புதிய அரசியல் சட்டம் குழிதோண்டிப் புதைக்கப்படும்வரை —தமிழ்ஈழ விடுதலையை காணும்வரை—தமிழினம் ஓயப் போவதில்லையென்பதையும் துலாம்பரமாக எடுத்துக்காட்டிவிட்டது!

இன விடுதலைப் போராட்டத்தின் ஈட்டி முனைகளாக—நாடி நரம்புகளாக விளங்கிடும் நம் அருமைக் கண்மணிகளான மாணவ மாணவியர் நூற்றுக்கு நூறு விதம் பாடசாலைப் பகிஷ்கரிப்பில் உணர்ச்சியுடன் ஈடுபட்டு, இந்த இயக்கத்துக்கு பெரும் வெற்றியீட்டிக் கொடுத்திருக்கிறார்கள்! அடிமைத்தனத்துக்கு எதிராக நடைபெற்றுவரும் இந்தப் புனிதமான போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் நம் மாணவச் செல்வங்கள் ஆர்வப்பெருக்குடன் கலந்துகொண்டு தங்கள் ஒத்துழைப்பை பூரணமாக நல்கி வந்திருக்கிறார்கள்; தொடர்ந்தும் நல்கி வருவார்கள் என்பதிலேயே யாருக்கும் துளியும் ஐயம் கிடையாது!

இந்த ஹர்த்தால் போராட்டத்தின்போது ஆங்காங்கே முப்பதுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பொலீசாரினால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்! மட்டக்களப்பு, கல்முனை, செங்கலடி, வவுனியா, கிளிநொச்சி, பருத்தித்துறை, வட்டுக்கோட்டை அரியாலைபோன்ற பல்வேறு ஊர்களிலும் எங்கள் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்!

கைதுசெய்யப்படுவதும்சிறைசெல்வதும் எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு இன்றைக்கு மிகவும் ஒரு சாதாரண சின்ன விஷயமாகிவிட்டது! இன விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு ஒரு முறையாவது இதுவரை சிறைசெல்லாதவன்—அதற்காக தனக்குள் தானே வெட்கப்பட்டு அதற்காக ஏங்கிக்கொண்டிருக்கும் காலம் இது! விடுதலைப் போராட்டத்தில் சிறை செல்லும் வாய்ப்பின்றி இருப்பதை ஒரு கூறை என்று நம் இளைஞர்கள் கருதுகின்ற காலமிது!

சிறையில் மூன்றாண்டுகளிருந்துவிட்டு சென்றவாரம் விடுதலையாகி வெளியே வந்த தம்பி குவேந்திரராஜாவுடன் நான் பேசிக்கொண்டிருந்தபோது — சிறையில் இருந்ததற்கும் விடுதலையாகி வெளியில் இருப்பதற்குமிடையே எத்தகைய வித்தியாசத்தையும் தம்மால் கண்டுகொள்ளமுடியவில்லை என்று தெரிவித்தார்! ஆம், இத்தகைய மனோ நிலை மட்டும் ஒவ்வொரு தமிழனுக்கும் ஏற்பட்டு விடுமானால்—எங்கள் தமிழ் ஈழத்தை விட்டு வெளியேறுவது தவிர சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு வேறு வழியே கிடையாத நிலையே விரைவில் ஏற்படும்! 35 இலட்சம் தமிழ் மக்களில் ஒரு மூன்று இலட்சம் பேர் சிறைக்கு சென்றால் நிலைமை என்ன ஆகும்? சிங்கள அரசாங்கத்தின் வெறிச்செயல்கள் இத்தகைய ஒரு மனத்திடத்தை தமிழ் மக்களிடையே இன்றைக்கு வளர்த்துவருகின்றன என்பது மட்டும் உண்மை!

மட்டக்களப்பில் எனது அருமை சகோதரர் கவிஞர் காசி ஆனந்தனையும், அருமைத் தம்பிகள் கே. அந்தோனி, கே. இரமணன், பி. இரத்தினம், எஸ். சந்திரமோகன், டி. சந்திரன், ஆரப்பற்றை ஸ்டீபன், செல்வேந்திரன், கே. குமாரதாசன், கே. பத்மநாதன், ஏ.முத்து ஆகிய பத்து வீர இளைஞர்களையும் தமது அரசியல் அதிகாரத்தைப் பிரயோகித்து கைது செய்து நான்கு நாட்கள் 'றிமாண்ட்' சிறையில் பூட்டிவைத்தார்கள் என்றால் — அதனால் ஹர்த்தாலை நசுக்கிட இவர்களால் முடிந்ததா? காசி ஆனந்தனும் ஏனைய இளைஞர்களும் உள்ளே தள்ளப்பட்டதால் — வெளியே ஹர்த்தால் இன்னும் உக்கிரமாக நடைபெற்றிருக்கிறது! மட்டக்களப்பின் வரலாறே காணாத அளவுக்கு பாடசாலைப் பகிஷ்கரிப்பு இந்தத் தடவை அங்கு வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது!

எந்த ஒரு விடுதலை இயக்கத்துக்கும் எருவாக— உரமாக— அமைவது அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைகள் தாம்! அடக்குமுறைகள் அதிகரிக்க அதிகரிக்கத்தான் ஒரு விடுதலை இயக்கம் வேகம் பெற்று உக்கிரமாக எழும்!

## அரசியல் மேடை

எனவேதான் சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைகளை நாம் இதயம் குளிர இரு கை நீட்டி இன்முகத்துடன் எப்பொழுதும் வரவேற்கிறோம்.

நண்பா, மே 22ம் நாள் அவசரகாலச் சட்டவிதியை மீறி நடைபெற்ற சட்டமறுப்பு ஊர்வலத்தில் கலந்துகொண்டு—ஆட்சியாளர்களின் அடக்குமுறையை நேருக்குநேராக சந்தித்திட—எதையும் தாங்கும் இதயத்துடன்—குமுறியெழும் உளத்தினராய்—கொந்தளிக்கும் மனத்தினராய் — தமிழர் கூட்டணியின் யாழ் செயலகத்தில் பல ஆயிரமாகத் திரண்டிருந்த தமிழர் பெரும்படையின் எழுச்சியையும்—அங்கு எரிமலையென வெடித்துக்கிளம்பிய விடுதலைப் பேருணர்வையும்— நேரடியாகக் கண்டிருப்பின் — ஆகக் கடைந்தெடுத்த ஒரு கோழைகூட வீரனாகியிருப்பான்; கூனனும் நிமிர்ந்திருப்பான்!

குமுறுகின்ற எரிமலையோ — கொந்தளிக்கும் அலைகடலோ — திமிறுகின்ற பெருங்காற்றோ — கொழுந்துவிடும் பெருந்தீயோ — எனும்படி நம்முடைய சிங்கேறுகள் — செந்தமிழ்க்காளைகள்—வெஞ்சினம்கொண்ட புலிகளென சிங்கள ஏகாதிபத்தியத்தின் எந்தவிதமான அடக்குமுறையையும் சந்தித்திட தயாராக—சட்டமறுப்பில் கலந்துகொண்டார்கள் என்றால் — நம்முடைய சகோதரிகள் மட்டும் என்ன சாமானியர்களா? சிங்கள ஏகாதிபத்தியத்தையே சுட்டெரிக்கத் தயாராக இருக்கும் கண்ணகிகளாக நம்முடைய தங்கையரும் தாய்மாரும் சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் உருகியோடும் தார்வீதியில் பல நூற்றுக் கணக்கில் பல மணிநேரம் அமர்ந்திருந்த காட்சியிருக்கிறதே — அது நம் உள்ளத்தை உருகவைக்கும் காட்சியாகும்!

நண்பா, மே 22 சட்டமறுப்பு போராட்டத்திலே பல ஆயிரக்கணக்கில் கலந்து கொண்ட நம்முடைய இளைஞர்களும் தாய்மாரும் ஏனையோரும் எதிர்த்து தயாராக வந்திருந்தவர்கள்; விடுதலைத்தெய்வத்துக்கு தங்களை பூரணமாக அர்ப்பணிப்பதற்கு தயாராக இருந்தவர்கள்; போராட்டத்திலே தங்கள் குருதியைக் கொட்டிட — எலும்புகளை முறித்துக்கொடுத்திட சதையை அறுத்துக்கொடுத்திட—மண்டைகளை உடைத்துக்கொடுத்திட—வேண்டுமானால் உயிரையும் அர்ப்பணித்திட தயாராக வந்தவர்கள்: இந்தச் சட்டமறுப்பு போராட்டத்திலே கலந்துகொண்ட எந்த ஒரு இளைஞனும்தான் உருப்படியாக வீட்டுக்கு திரும்பிப்போக முடியும் என்கிற நம்பிக்கையுடன் வரவில்லை; போராட்டத்துக்குபோகிறேன்—உயிருடன் திரும்பிவந்தால் கண்டுகொள்—என்று வீட்டில் கூறிவிட்டு வந்தவர்கள்!

சட்டமறுப்புபோராட்டத்தில் கலந்துகொண்டு பொலிசாரின் குண்டாந்தடிகளின் கோரப்பசிக்கும்— கண்ணீர்ப்புகைக்கும்—துப்பாக்கிக் குண்டுகளுக்கும் தம்மைப் பலி தந்து தமிழீழ விடுதலை வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை சமைப்பதற்கு துடித்து நின்ற நம் அருமைத் தம்பிகள் பலருக்கு — அதற்கான வாய்ப்பை தலைவர்கள் ஏற்படுத்தித் தரவில்லையே என்கிற ஒரு தாபமும் கொதிப்பும் அன்றைய தினம் ஏற்பட்டதென்பதை நான் பெருமையோடு ஒப்புக்கொள்ளுகிறேன்! நம் இளைஞர்களிடையேஏற்பட்டஇந்தக்கொதிப்பு நமக்கெல்லாம் பெருமையளிப்பதாக உள்ளதே தவிர கிஞ்சிற்றும் சிறுமையளிப்பதாக இல்லை!

போராட்டத்துக்கு வரும்படி அழைப்பு விடுத்தார்கள்! யாருமே வரவில்லை; அதனால் போராட்டமே பிசுபிசுத்தது என்கிற நிலை இருக்குமானால் அதுதான் நமக்கு அவமானமே தவிர—அடக்குமுறையைச் சந்தித்திட ஆணையிடு தலைவா, இதோ எங்கள் உயிரைப்பணயம் வைத்தாவது எதிரிகளின் கொடுங்கோலை ஒழித்து வருகிறோம் என்று துடித்தெழும் மானவீரர்கள் பல்லாயிரக்கணக்கில் ஒரு இயக்கத்தில் இருப்பார்களானால் அது அந்த இயக்கத்துக்கும் இயக்கத்தலைவனுக்கும் பெருமையளிப்பதாகவேயிருக்கமுடியும்!

ஈழத் தமிழ்க்குலத்தின் இளம் தலைமுறை விடுதலைப் பாதையில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு தீவிரமான பாதையில் வேகமாகச் சென்றிடத்துடிக்கிறது; ஆனால் அதே சமயம் எவ்வளவுதான் நமது இளைஞர்கள் குமுறியெழுந்திடினும் —ஒரு கட்டுப்பாடான இயக்கமாக—ஒரு தலைவனின் ஆணைக்குக்கட்டுப்பட்ட வீரர்களாகவே அவர்கள் இயங்குவார்கள் என்பதையும் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கும் அகில உலகுக்கும் மே22—சம்பவங்கள் எடுத்து விளக்கிவிட்டன!

ஆம், சட்டமறுப்பு ஊர்வலத்தை நான்கு பக்கமும் முட்கம்பி வேலியைப் போட்டு ஐநூற்றுக்கு மேற்பட்ட பொலிசார் குண்டாந்தடிகள், கண்ணீர்ப்புகைக் குண்டுகள், கைத்துப்பாக்கிகள், இயந்திரத்துப்பாக்கிகள் சகிதம் தடுத்துநிறுத்திய நேரத்தில் — மூதறிஞர் தந்தை செல்வாவின்—மோகனப் புன்னகைக்கு சுட்டுவிரலசைவுக்கு—கட்டுப்பட்டு ஊர்வலத்தில் வந்த பல்லாயிரக்கணக்கான மக்களும் கொதிக்கும் வெயிலில் உருகியோடும் தார்வீதியில் அப்படியே அமர்ந்த காட்சி பொலிசார் உட்பட அனைவரையும் மயிர்க்கூச்செறியச் செய்த காட்சியாகும்!

உள்ளம் உலைக்கூடமாக கனன்றெழுந்தாலும் —பொலிசாரின் முட்கம்பி வேலிகளைமுறித தெறிந்து முன்னேறுவதற்கு கால்கள் துடித்தாலும் — வாய்கள் ''தடையை மீறிட தலைவா ஆணையிடு'' என்று ஆவேச முழக்கம் எழுப்பினாலும் — நம்முடைய வீர இளைஞர்கள் தந்தையின ஆணைக்கு அடங்கி — கட்டுப்பாடான ஒரு இராணுவம் போல செயற்பட்ட அந்தத் தன்மை இருக்கிறதே — அதற்காக அந்த இளைஞர்களின் கட்டுப்பாட்டுணர்வுக்காக — நான் அவர்களையெல்லாம் ஆரத்தழுவி முத்தமிடவிரும்புகிறேன்!

ஆம் — எந்த ஒரு இயக்கத்துக்கும் கட்டுப்பாடுதான் மிகவும் அவசியம்! அந்தக் கட்டுப்பாட்டுணர்வு நம் இளைஞர்களிடம் நிறைந்துள்ளதை மே22 — சட்டமறுப்பு சம்பவம் தெளிவாக எடுத்துக்காட்டிவிட்டது!

நமது தொண்டர்கள் எந்தவிதமான பதட்டநிலையிலும் தலைமைக்குக் கட்டுப்

-8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# தேசிய ஒற்றுமை!

இந்நாட்டில் சிங்களப் பெரும்பான்மை இன ஆட்சி, தமிழர்களை ஒழித்துக்கட்டக் கூடிய பல்வேறு இன ஒழிப்புத் திட்டங்களை திட்டமிட்டு வெகுதீவிரமாக செயற்படுத்திவருகிறது.

சிங்களம் மட்டும் சட்டம்—தமிழ் மொழியின் உரிமையை மறுத்து—தமிழ் சமுதாயத்தை அடிமை நிலைக்குத்தள்ளி—தமிழ் மக்களின் வேலைவாய்ப்புக்களை பறித்து தமிழ் அரசாங்க ஊழியர்களின் வயிற்றிலடித்து—தமிழினத்தின் தன்மானத்துக்கு பெரும் சவால்விடுத்து வருகிறது.

குடியுரிமை வாக்குரிமைச் சட்டங்கள்—மலைநாட்டுத் தமிழர்களின் வாக்குரிமை குடியுரிமைகளைப் பறித்து—அவர்களை அரசியல் அனாதைகளாக்கி—நாடற்றவராக்கி—சந்தேகப் பிரஜைகளாக்கி வைத்திருக்கிறது!

உயர் கல்வியில் சிங்கள அரசு பின்பற்றும் "தரப்படுத்தல்" கொள்கை—திறமையும் தகுதியும் மிகுந்திருந்தும்—தமிழ் மாணவர்களின் உயர் கல்வியை—எதிர்காலத்தை அடியோடு நிர்மூலமாக்கிவிட்டது.

தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகமாம் தமிழ் ஈழமோ—நாளிலும் பொழுதிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் சமுதாயத்தின் கலை, கலாசார, பண்பாட்டு வளர்ச்சியும் முன்னேற்றமும் தடுத்து நிறுத்தப்படுகிறது! தமிழர்கள் பின்பற்றும் மதங்களின் உரிமைகள் பௌத்த சிங்கள வெறியர்களால் பறிக்கப்படுகின்றன; தடுக்கப்படுகின்றன!

தமிழ் ஈழத்தில் தன்னுடைய மொழி, கலை, கலாசார வளர்ச்சி குறித்து ஆராய்வதற்கு தமிழன் ஒரு உலகளாவிய மாநாடு கூட்டவும் அனுமதியற்று இருக்கிறான்—மீறி மாநாடு கூட்டினால் அடித்து விரட்டப்படுகிறான்!

தமிழ் ஈழத்தின் உயர்மட்ட நிர்வாக அதிகாரிகள் அனைவரும் சிங்களவர்களாகவே அனுப்பப்படுகின்றனர்; தமிழ் ஈழத்தை ஒரு 'காலனி' போலவே கருதி ஆட்சி நடத்தி வருகிறது சிங்கள ஏகாதிபத்தியம்!

இத்தனை அநியாயங்களுக்கும், அநீதிகளுக்கும் பாரபட்சங்களுக்கும் இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கும் உறைவிடமாக—அதர்மச்சட்டங்களின் கூட்டாக—புதிய அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தமிழினத்தை ஒழித்துக்கட்டி—தமிழ் ஈழத்தை ஆக்கிரமித்து ஒரு தனிப் பௌத்த சிங்கள நாடாக இந்நாட்டை உருவாக்குவதற்கு புதிய அரசியல் சட்டம் வழிவகுத்துக் கொடுக்கிறது!

சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தின் கொடூர இன ஒழிப்பு நடவடிக்கையினால் நசுக்கப்படும் ஈழத் தமிழ தனக்கிழைக்கப்படும் அநீதிக்கு எதிராக ஓங்கிக் கூக்குர லிடும்போது—'இனக்கொலை' பற்றி சத்தமிடும்போது—அது உலகின் காதுகளில் விழுந்து விடாமல் தடுப்பதற்கு அரசாங்கமும், அரசாங்க வால் பிடிகளும், அரசாங்கத்தின் ஊதுகுழல்களான பத்திரிகைகளும் ஒரே குரலில் பாடும் 'கோரஸ்'தான் தேசிய ஐக்கியம்—தேசிய ஒருமைப்பாடு—என்கிற வார்த்தை ஜாலங்கள்!

தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, இன சௌஜன்யம் என்கிற போலித்தனமான கூக்குரலை உதட்டளவில் உரத்து எழுப்பிக்கொண்டு—அந்தத் திரை மறைவில்—ஈழத் தமிழினத்தின் கழுத்தை நெரிக்கும் பயங்கரக்கொலை இங்கு நடைபெறுகிறது என்பதை உலக நாடுகள் உணரவேண்டும்!

சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம் "தேசிய ஒற்றுமை" எனும் மூடுதிரையின் கீழ் நடத்திவரும் 'இனக்கொலை' நடவடிக்கைகளுக்கு பக்கப்பாட்டுப் பாடுவதுதான் அரசாங்க வால்பிடிகள் இந்த வாரம் கொழும்பில் நடத்தும் 'தேசிய ஒருமைப்பாடு' மாநாடாகும்!

இவர்கள் 'தேசிய ஒற்றுமை' மாநாடு நடத்தும் அதே வேளையில்—இந்த அரசாங்கம் 'தேசிய ஒற்றுமையை' எப்படி உருவாக்கவிரும்புகிறது என்பதை கொழும்பில் நடைபெற்ற பௌத்த சாங்கிரஸ் வெசாக் விழாவில் பேசிய அமைச்சர் மைத்திரிபாலாவின் பேச்சு புட்டுக் காட்டிவிட்டது.

தமிழர் தாயகமாம் வடமாகாணத்தில் சிங்களப் பாடசாலைகளை நிறுவியதற்கு பௌத்த காங்கிரசை பாராட்டியுள்ள அமைச்சர், வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள தமிழ்ச் சிறுவர்களை பௌத்த தேரோக்களாக்கவேண்டுமென்று அதன் மூலம் தமிழ்ப் பகுதியில் பௌத்த தர்மத்தை பரப்பவேண்டுமென்றும் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்! (ஆதாரம் வீரகேசரி 26-5-75)

ஆம், இந்நாட்டில் பலவந்தமாகவோ—அல்லது வேறு முறையிலோ—தமிழ் மக்கள் மத்தியில் சிங்களத்தையும் பௌத்தத்தையும் திணித்து—அவர்களை இன, மத மாற்றம் செய்து—தமிழினத்தை முற்றாக அழித்தொழித்து—நாடு முழுவதையும் தனிப் பௌத்த சிங்கள நாடாக்குவதன் மூலமே, இந்நாட்டில் 'தேசிய ஒருமைப்பாட்டை' உருவாக்குவதற்கு அரசு திட்டமிட்டு செயல்படுகிறது. இதையே மைத்திரிபாலாவின் பேச்சு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. இத்தகைய தேசிய ஒற்றுமைக்குத்தான்—தமிழினத்துக்கு குழிபறிக்கும் ஒருமைப்பாட்டுக்குத்தான்—முற்போக்கு எழுத்தாளர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் வக்காலத்து வாங்குகிறார்கள்!

சிங்களத் தலைவர்களில் நியாயமான மனிதர் என்று கருதப்படும் அமைச்சர் மைத்திரிபாலாவே இப்படிப் பேசியிருக்கையில் ஏனையோரின் மனோபாவம் எப்படியிருக்கும் என்பது நாம் சொல்லாமலே தமிழ் மக்களுக்குப் புரியும்.

# குடியரசுநாள் சட்டமறுப்பு ஒரு மாபெரும் சாதனைதான்!

## 'ஈழநாட்டின்' பூனைக் கண்களுக்கு இது தெரியாமல் போனதேனோ?

தமிழர் கூட்டணியினர் குடியரசுத் தினத்தன்று நடத்திய சட்டமறுப்பு போராட்டத்தைப்பற்றி 25-5-75 'ஈழநாடு' இதழின் கடைசிப் பக்கத்தில் எஸ். எம். ஜி. என்பவர் "மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதை" என்ற தலைப்பில் நுனிப்புல் மேய்வது போல—ஆராயாமல் — ஆத்திரத்துடன் — ஒன்றுக்கும் உதவாத கட்டுரை ஒன்றை எழுதி இருக்கிறார். இந்தக் கட்டுரையில் இவர் தமிழர் கூட்டணித் தலைவர்களுக்கிடையிலும் — இளைஞர்களுக்கிடையிலும் ஒரு வெடிப்பை — பிளவை — மனக்கொதிப்பை உண்டாக்கும் முகமாகவே சில விஷயங்களை அப்பட்டமாக வெட்கமின்றி வெளியிட்டிருக்கிறார் என்று துணிந்து சொல்லுவேன்.

இதே எஸ். எம். ஜி. தான் பல மாதங்களுக்கு முன்னர் உலக தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் ஜனார்த்தனம் பற்றியும் மணவைத்தம்பி பற்றியும்—எல்லாம் தெரிந்தவர்போல் — தேவை இல்லாதவற்றை எல்லாம் எழுதி பின்னர் சுதந்திரனிடமிருந்து நன்றாக வாங்கிக் கட்டிக்கொண்டவர் என்பதையும் நாம் மறந்துவிடவில்லை.

தமிழர் கூட்டணியினர் செய்தது சரியோ பிழையோ என்று நான் இங்கு சொல்ல வரவில்லை. அந்த நேரத்தில் — அந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் நடந்துகொண்ட விதம் ராஜதந்திரத்துடன் கூடிய செயல் என்றே நான் மட்டுமல்ல பலர் சொல்லுகிறார்கள். ஏனெனில் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் கடைசி நாள் இரவில் கிட்டத்தட்ட 50,000 மக்கள் மத்தியில் பொலிசார் வீதியை மறிக்கிறார்கள் மக்கள் என்று சொல்லி நுழைந்து அதை சாட்டாக வைத்துக்கொண்டு எடுத்த நடவடிக்கைகளை நாம் மறக்க முடியுமா? 1961-ம் ஆண்டு சத்தியாக்கிரகம் இரண்டு மாதத்துக்கு மேலாக வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது ஒருநாள் நள்ளிரவில் கச்சேரிக்கு முன்னால் இருந்த தொண்டர்களை, தலைவர்களை, பெண்மணிகளை கைது செய்தும் அடித்தும் துன்புறுத்தவில்லையா?

அப்படிப்பட்ட நிலையில் கேவலம் ஏன் அதே அம்மையாரின் பொலிசார் சுமார் 4000 மக்கள் — தலைவர்களுடன் பிரதான வீதியை மறித்து 25 யார் ஊர்வலம் போய் — பெண்மணிகளும் சேர்ந்து பட்டப்பகலில் பிரதான வீதியை 3 மணித்தியாலங்களுக்கு மேலாக மறித்து, உட்கார்ந்து கூட்டம் நடத்தி — கோஷமிட்டு காசிஆனந்தனின் உணர்ச்சிப் பாடல்களைப் பாடியும் ஒன்றும் செய்யாமல் — எல்லாவித ஆயுதங்களோடு வந்தும் — இராணுவம் தயார் நிலையில் இருந்தும் — மௌனமாக வாய் பொத்தி கைகட்டி நின்றதன் காரணம் என்ன ?

பிரதான வீதியை மறிக்கிறார்கள் என்று சட்டப்படி எல்லாரையும் கைது செய்திருக்கலாமே அல்லது தடியடிப் பிரயோகம் செய்திருக்கலாமே. அது தான் போகட்டும் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று செய்தது போல் கண்ணீர்புகை குண்டுகளை விசி சுட்டுத்தள்ளி இருக்கலாமே ஏன் செய்யவில்லை? பதில் சொல்லுவார்களா எட்டப்பர்கள்? இவ்வளவும் நடக்காத பொழுது — நாம் வெற்றி பெற்ற பின்னர் எதற்காக நாம் தலைவர்களின் ஆணையை மீற வேண்டும்? ஊர்வலம் போக வேண்டும்? அங் கொடையில் இருப்பவனும் அப்படி செய்யவே மாட்டான்.

இதற்கு மாறாக ஐந்தாம் படையினரின் எண்ணப்படி அன்று எல்லாரும் செயல்பட்டிருந்தால் எட்டப்பர்களின் கூட்டம்—காட்டிக் கொடுப்பவர்களின் கூட்டம் அடுத்த நாள் வெற்றி விழா கொண்டாடி இருக்கும். பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாப கூட்டங்களை நடத்தி நீலிக் கண்ணீர் வடித்து—சிலை எழுப்பி தங்கள் இழந்துபோன செல்வாக்கை பெற தலைவர்களின் மீது பழியைப் போட்டு—எல்லா வகையான நடிப்புக்களையும் கையாண்டு மக்களை ஏமாற்றி எம் விடுதலைப் போராட்டத்தை சுலபமாக முறியடிப்பார்கள். இதைத்தான் எஸ். எம். ஜி. யும் அவர் கூறும் இளைஞர்களும் விரும்புகிறார்கள் ?

திட்டமிட்டபடி நீண்ட தூரம் ஊர்வலம் போக முடியவில்லை, உண்மை. அதற்காக சீன கம்யூனிஸ்டுகள் எப்பொழுதோ நடத்திய சட்டமறுப்பு ஊர்வலத்தை ஏன் எங்களுடைய போராட்டத்தோடு ஒப்பிட்டு எழுதவேண்டும். இதன் திட்டம் என்னவோ?

சென்ற டட்லியின் ஆட்சியின் பொழுது ஒருமுறை சுன்னாகத்திலிருந்து ஒரு சட்டவிரோத ஊர்வலத்தை இந்த சீன கம்யூனிஸ்டுகள் நடத்தினார்கள். ஊர்வலம் ஒரு 5 யார்தான் போயிருக்கும். பொலிசார் அதை தடுத்து தடியடிப் பிரயோகம் செய்தார்கள் என்ன நடந்தது? பலர் காயப்பட்டு நாலாபக்கமும் சிதறுண்டு ஓடினார்கள். அத்துடன் அந்த ஊர்வலமும் கூட்டமும் முடிந்தது. இதில் தலைவர் சண்முகதாசன் பங்குபற்றவில்லை. எந்தப் பெண் மணியும் பங்குபற்றவில்லை.

பின்னர் இன்னுமொரு தடவை யாழ் நகரில் ஊர்வலம் ஆரம்பிக்கும் இடத்தை அறிவிக்காமல் "ராஜா" தியேட்டரில் இருந்து திட்டமிட்டபடி படம் பார்த்துவிட்டு வெளியே வந்து எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத விதமாக ஊர்வலத்தை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்த பொழுது பொலிசார் திடீர் நடவடிக்கையில் இறங்கினார்கள். சில நூறு பேர்களை கொண்ட அந்த ஊர்வலத்தினரினால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. நாலாபக்கமும் சிதறுண்டு ஓடினார்கள் ஒருசிலர் படுகாயப்பட்டார்கள். அத்துடன் அந்த ஊர்வலமும் கூட்டமும் முடிவுற்றது. இத்தனைக்கும் தலைவர் சண்முகதாசன் — தலைவர் மாவோவின் பெயரை ஒரு நிமிஷத்துக்கு ஒரு தடவை உச்சரிக்கும் தலைவர்—வாய் வேதாந்தத்தோடு நிற்கும் தலைவர்—பங்குபற்றவேயில்லை. பெண்களும் பங்குபற்றவில்லை. அத்துடன் சீன கம்யூனிஸ்டுகளின் ஊர்வலப் போராட்டம் முற்றுப்பெற்றது. மக்களும் அதைப்பற்றி ஒன்றும் கேட்கவில்லை. அக்கறை காட்டவும் இல்லை.

சீன கம்யூனிஸ்டுகள் அவர்களின் புரட்சிக் கொள்கைப்படி சட்டத்தை மீறி ஊர்வலம் போய் அடிப்பட்டார்கள் என்பதற்காக நாமும் அப்படி செய்ய வேண்டும் என்பது என்ன வாதமோ? இதன் உட்பொருள் என்னவோ? நாம் சட்டத்தை மீறி ஒரு சிறு தூரம் ஊர்வலம் போய் பிரதான வீதியை மறித்து சட்டமறுப்பு செய்து கோஷமிட்டும், கூட்டம் போட்டும், பாட்டுக்கள் பாடி 3 மணித்தியாலங்களுக்கு மேலிருந்தது அந்த எஸ். எம். ஜி. என்பவருக்கு பெரிதாக—ஒரு சாதனையாக தெரியவில்லை. அருவுடைய கண்களுக்கு சீன கம்யூனிஸ்டுகள் ஒரு அரை மணித்தியாலம் கூடி ஊர்வலம் போய் சிதறுண்டு போனதுதான் பெரிய சாதனையாக ஒரு மாபெரும் புரட்சியாக சீன புரட்சிக்கு அடுத்த பெரிய புரட்சியாக அவருடைய கண்களுக்கு தெரிகிறது.

தமிழர் கூட்டணி ஒரு மக்கள் இயக்கம் இன்றைக்கு ஒன்றை செய்து விட்டு நாளைக்கு பேசாமல் இருக்க முடியாது. மக்களுக்கு கட்டாயம் பதில் சொல்லியே தீரவேண்டும். மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் அவர்கள் செயல்பட வேண்டும். இதில் தவறில்லை.

தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று இரவில் ஒன்பது உயிர்கள் பலியாயின. வேண்டுமென்றே நடந்த இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் நாம் என்ன செய்தோம்? தொடர்ந்து ஆட்சியாளரை எதிர்த்து போராடினோமா? ஏன் போராடவில்லை? இதை நம்முடைய வீர இளைஞர்கள் சிந்திக்க வேண்டும்.

வியட்நாம்—கம்போடியா போன்று தொடர்ந்து ஒரு போராட்டம் நடைபெறுமானால் அப்பொழுது நாம் இவற்றைப்பற்றி எல்லாம் யோசிக்க வேண்டியதில்லை. ஆனால் இன்றைய நிலையில் பலம் கொண்ட ஆட்சியாள

—5-ம் பக்கம் பார்க்க

### ஈழ விடுதலைப் பாச...

—1-ம் பக்கத் தொடர்

முன்னணியுடன்' இணைந்து செயல்படுவதென தீர்மானித்துள்ளது.

ஈழவிடுதலை முன்னணியின் வட அமெரிக்க பிரதேசக் கிளைத் தலைவராக கலாநிதி இராச. இராசேந்திரன் தெரிவுசெய்யப்பட்டார்.


உடனடியாக இலங்கை சென்று அங்குள்ள விடுதலை முன்னணி வீரர்களுடன் உரையாடுவதற்கென உயர் மட்டக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது. இக்குழு வேறு பல நாடுகளுக்குச் சென்றும்பேச்சுவார்த்தை நடாத்துவதென்று முடிவுசெய்துள்ளது.

தியாகி சிவகுமாரன் நினைவு தினமான எதிர்வரும் ஜூன் 5ம் நாளை—தமிழர் விழாவாக நியூயார்க், டொராண்டோ, வாஷிங்டன் ஆகிய மூன்று நகரங்களிலும் கொண்டாடுவது எனவும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.


இலண்டனிலிருந்து வெளிவரும் 'ஈழவிடுதலை'யை மறு பிரசுரம் செய்து வட அமெரிக்காவெங்கும் விநியோகிப்பதெனவும், தமிழர் கூட்டணியின் மீது தொடர்ந்து நம்பிக்கை வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டமறுப்புப் போராட்டம்!



சட்டமறுப்புத் தொண்டர்கள் மத்தியில் பெண்புலி போல விடுதலை முழக்கமிடுகிறார் தமிழ் மகளிர் பேரவை செயலாளர் திருமதி அமிர்தலிங்கம். படம்: ஏ. வி. மகாலிங்கம்



அவசரகாலச் சட்டத்தை மீறி — குடியரசு பகிஷ்கரிப்பு சுவரொட்டிகளை தமிழர் கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வா அவர்கள் பொலிசார் முன்னிலையில் தமது கைப்படதாமே ஒட்டுகிறார். கூடவே திருவாளர்கள் வி. ஆனந்தசங்கரி பா. உ., திரு. வி. தர்மலிங்கம் பா. உ. ஆகியோர் காணப்படுகின்றனர்.

படம்: ஏ. வி. மகாலிங்கம்.

# குடியரசு விழாத் துண்டுப் பிரசுரங்களை மாணவர்கள் கிழித்து வீசினார்கள்!

## மட்டக்களப்பு கொந்தளித்து எழுந்தது!

மட்டக்களப்பின் தலைநகரில் உள்ள அரசினர் மகா வித்தியாலயம் அர்ச்மிக்கல் கல்லூரி, மத்திய கல்லூரி, சிவானந்தா வித்தியாலயம், வின்சன்ற் மகளிர் கல்லூரி, அரசடிப் பாடசாலை ஆகிய பாடசாலைகள் குடியரசு எதிர்ப்பு ஹர்த்தாலன்று பூரண பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் உள்ள 50 பாடசாலைகளில் 25,000 மாணவர்கள் பகிஷ்கரிப்பு நடத்தினார்கள்.

கிராமப்புறச் சூழலில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் முற்றாக மூடிக் கிடந்தன.

19.5.75 திங்கட்கிழமை அன்று கவிஞர் காசி ஆனந்தனும் 100 இளைஞர்களும் குடியரசுதின ஹர்த்தால் ஏற்பாட்டுவேலைகளை கவனிப்பதில் தீவிரமாக ஈடுபட்டனர். ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் சென்று துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தனர். ஒவ்வொரு கடைகளுக்கும் சென்று துண்டுப் பிரசுரங்கள் கொடுத்து மே 21ல் மூடுமாறு கேட்டுக் கொண்டனர்.

இவர்கள் இவ்வாறு தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும்பொழுது 'பீயார்' தனது வழக்கமான குரங்குச் சேட்டையைக் காட்டுவதற்குப் பயந்து புத்திசாலித்தனமாகத் தப்பிக்கொண்டார். இவர் காடைத்தனம் செய்யும்படி அனுப்பியதாக சொல்லப்பட்ட மூவரில் ஒருவர் பொதுமக்களின் அடி உதைகளை வாங்கிக்கொண்டு ஓடிவிட்டார். மற்ற இருவரும் கவிஞர் காசி ஆனந்தனின் அறிவுரைகளைக் கேட்டு உணர்ந்து, அவர்களும் சேர்ந்து துண்டுப் பிரசுரங்களைக் கடைகளுக்கு விநியோகித்தனர்.

இதைத் தொடர்ந்து "பீயார்" தனது முட்டாள் வேலைகளுக்கும் வால்பிடி வேலைகளுக்கும் காசி ஆனந்தன் தடையாக இருப்பார் என்று கருதி பொலிசாருக்கு உத்தரவிட்டதன்பேரில் மட்டக்களப்பு கடைத்தெருவில் வைத்து பொலிசார் கவிஞர் காசி ஆனந்தனையும் ஜீப் வண்டியில் ஏற்றக்கூடிய அளவு இளைஞர்களையும் கைதுசெய்து ஜீப் வண்டியில் ஏற்றி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்வதைவிட்டு மாநகரசபையின் மாவட்ட முட்டாளின் அலுவலகத்திற்குக் கொண்டு செல்லும் வழியில் கல்குடா பிரதிநிதி கே. டபிள்யூ. தேவநாயகத்தின் தலையீட்டால் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்றனர்.

பொலிஸ் நிலையத்தை பெருந்திரளான மக்கள் முற்றுகையிட்டனர். திரண்டு நின்ற மக்களை பொலிசார் தாக்கினர். தொடர்ந்து நூற்றுக்கணக்கான இளைஞர்கள் உணர்ச்சி ஆவேசத்தோடு தாங்களும் சிறை செல்லத் தயார் என்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

சிங்கத்தை அடைத்துவிட்ட தைரியத்தில் குள்ளநரி தனது வழமையான சேட்டைகளை (சிறுவர்களைத் தாக்குவது) செய்ய ஆரம்பித்தது.

கவிஞர் காசி ஆனந்தனுடன் கைது செய்யப்பட்ட இளைஞர்களின் பெயர் த. சந்திரன், பூ. ரத்தினம், சந்திரமோகன், சி. ரமணன், க. அன்ரன்.

19—5—75 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு காசி ஆனந்தனையும் கைது செய்யப்பட்ட ஏனைய இளைஞர்களையும் ஜீப் வண்டியில் மறியல் சாலைக்குப் பொலிசார் கொண்டு சென்றனர்.

### தெருவெல்லாம் குப்பை

20—5—75 செய்வாய்க் கிழமை 'பீயார்' விநியோகித்த குடியரசு விழாத் துண்டுப் பிரசுரங்களை மாணவர்கள் கிழித்துத் துப்பி வீசினார்கள். தெருவெல்லாம் குப்பை!

வாழைச்சேனையைச் சேர்ந்த அ. செல்வேந்திரன் பத்மநாதன், கே. குமாரதாசன் முதலிய இளைஞர்களும் ஹர்த்தால் சம்பந்தமாக கைது செய்யப்பட்டனர். ஊரெல்லாம் கறுப்புக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

பாட்டாளிபுரத்தில் உள்ள ராஜன் அரங்குவெப்புமையால் அழிக்கப்பட்டிருந்தது. வீதிகள், சுவர்கள், மதில்கள், பாடசாலை எங்கும் காசி ஆனந்தனையும் இளைஞர்களையும் விடும்படியான சுலோகங்களும் குடியரசு எதிர்ப்புச் சுலோகங்களும் எழுதப்பட்டிருந்தன. இச் சுலோகங்களை அழிக்கும் வேலையில் முட்டாளும் ஒரு சில கூலிகளும் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தனர்.

---

## மாநாட்டில் கலந்து...

—1-ம் பக்கத் தொடர்

வின் காலில் விழுந்து எப்படியாவது தங்கள் மானத்தை காப்பாற்றுமாறு மன்றாடினராம். இவர்கள் முன்வைத்த 'ஒரிஜினல்' 12 அம்சத்திட்டத்தை தம்மால் அப்படியே ஏற்கமுடியாதென அமைச்சர் இலங்கரத்தின மறுத்துவிட்டாரென்றும், அதன்பின்னர் 12 அம்சத் திட்டங்களும் வெட்டப்பட்டு புதிய முறையில் உருவாக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

புதிதாக உருவாக்கப்பட்ட 12 அம்சத்திட்டத்தில் தமிழ், தமிழினம் என்று வரும் சொற்கள் யாவும் அகற்றப்பட்டு, அந்த இடங்களில் 'தேசியமக்கள்' என்ற சொற்கள் புகுத்தப்பட்டதாக அறியப்படுகிறது.

"தமிழை" ஒழித்துவிட்டு புதிதாக தயாரிக்கப்பட்டுள்ள 12 அம்சத்திட்டத்தின் அடிப்படையிலேயே 'ஒருமைப்பாடு' மாநாடு நடைபெறுகிறதாகவும் அறியப்படுகிறது. தமிழையும் தமிழரையும் ஒழித்துக் கட்டுவதன் மூலமே இந்நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கும் அரசாங்கத் திட்டத்தை இது உறுதிப்படுத்துவதாகவும் வர்ணிக்கப்படுகிறது!

பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையே தங்கள் 12 அம்சத்திட்டம் என்று கூறி ஒருமைப்பாடு மாநாட்டுக்கு தமிழ் வர்த்தகர்களிடமும் பிரமுகர்களிடமும் முற்போக்கு சங்கத்தினர் பணம் திரட்டினர்; ஆனால் இறுதி நேரத்தில் அந்த 12 அம்சத்திட்டம் உருச் சிதைக்கப்பட்ட செய்தியறிந்து பணம் கொடுத்தவர்கள் உள்ளம் குமுற ஆரம்பித்துள்ளனர்.

இந்த மாநாட்டுக்கு ஆதரவு தருமாறு கோரி சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் துணைத்தலைவரும் பிரபல சட்டத்தரணியுமான திரு. ஏ. சி. நடராசா அவர்களிடம் முற்போக்கு சங்கத்தினர் சென்றபோது, "உங்கள் 12 அம்சத்திட்டதில் ஒருமைப்பாட்டை உருவாக்க புதிதாக என்ன இருக்கிறது? இப்பொழுதுள்ள நிலைமைதானே உங்கள் 12 அம்சத்திட்டத்திலும் இருக்கிறது! (அதாவது சிங்களம் மட்டும் சட்டமும் - தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டமும்) மாநாடு கூட்டி புதிதாக என்ன செய்யப்போகிறீர்கள்? என்று கேட்டு விரட்டியடித்து விட்டாராம்.

## கைது!

குருநகர் தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. கிறிஸ்ரியனும் அதே பகுதியைச் சேர்ந்த துடிப்புமிகு இளைஞர் டிலிப்குமாரும் துரோகப்பரின் தூண்டுதல் காரணமாக 16-5-75 முதல கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கட்பட்டுள்ளனர்.

## குடியரசு நாள்...

—4-ம் பக்கத் தொடர்

ருடன் மோதும் போது அஹிம்சையை கடைப்பிடிக்கும் நாங்கள் விட்டு விட்டுத் தான் போராட்டம் நடத்த வேண்டும். கடைசி நேரத்திலும் யோசித்துத்தான் நடக்கவேண்டும். மூளையைப் பாவித்துத்தான் நடக்கவேண்டும்.

— வி. ஆர். லிங்கம்
இணுவில்


**சுத்தம் சுகம் தரும்**

சுத்தமாக இருக்க நீம் சோப் (வேப்பெண்ணெய் கலந்தது) பாவியுங்கள். 2 நீம் சோப் மேலுறைகளை அனுப்பி வேம்பு என்ற புத்தகத்தைப்பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**
த. பெ. எண் 77. யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழிபறிக்கும் கொடியரசை எதிர்த்து

# தமிழ் ஈழம் கொதித்தெழுந்த காட்சி!

## மட்டக்களப்பில் பேரெழுச்சி!

## மன்னரில் பொலிசாரின் காடைத்தனம்!

## கிளிநொச்சியில் கிழவரின் வீரம்!

**புதிய அரசியல் சட்டத்தை தமிழினம் என்றைக்கும் எதிர்த்து நிற்கும் என்பதை உலகிற்கு உணர்த்தும் முறையில் குடியரசு அரசியற் சட்டத்தை எதிர்த்தும் தமிழினம் தன்னைத்தானே ஆளுவதற்கு உறுதி பூண்டுள்ளதுஎன்பதை எடுத்துக்காட்டுவதற்குமாக மே 21ம் நாள் தமிழ் ஈழம் முழுவதும் நடைபெற்ற ஹர்த்தால் மாபெரும் வெற்றியை அளித்துள்ளது.**

பாடசாலைப் பகிஷ்கரிப்பு நூற்றுக்கு நூறு வீதம் வெற்றியளித்துள்ளது. முன்னைய ஹர்த்தால்களை விட இம்முறை நடைபெற்ற ஹர்த்தால் மிகப் பெரும் உணர்ச்சிப் பெருக்குடன் அமைந்திருந்தது.

மே 20ம் திகதி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் தமிழ் ஈழத்தின் அரசவைக் கவிஞர் காசி ஆனந்தன் கைதானர் என்ற செய்தி கேட்டதும் பாடசாலையைப் பகிஷ்கரித்து கொந்தளிக்கும் உணர்ச்சியோடு வெளியேறினர்.

யாழ்ப்பாண மாநகரம் ஹர்த்தால் காரணமாக வெறிச்சோடிச் சோபை இழந்து காணப்பட்டது. நவீனசந்தையும் கடைகளும் இழுத்து மூடப்பட்டு காட்சியளித்தன. கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒருவரின் புத்தக கடையொன்றை தவிர அனைத்துக் கடைகளும் பூட்டப்பட்டுக் காட்சியளித்தன. தமிழர் கூட்டணித்தலைவர்களுடைய கார்களிலும் கறுப்புககொடிகள் காணப்பட்டன.

துப்பாக்கி தாங்கிய பொலிசார் எங்கும்செறிந்து காணப்பட்ட போதிலும், மக்கள் அமைதியான முறையில் கடமை கட்டுப்பாடு கண்ணியம் காத்து ஹர்த்தாலை அனுஷ்டித்தார்கள். புதன் கிழமை சந்தை நாளாக இருந்த போதிலும் அன்று சந்தை கூடாததினுல் அது வெறிச்சென்று காணப்பட்டது.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கிளிநொச்சி வட்டுக்கோட்டை வவுனியா ஆகிய இடங்களில் எம் தமிழ் வாலிபர்கள் கைது செய்யப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டார்கள்.

ஈழத் தமிழகத்தின் தலைநகராம் திருமலையில் பொங்கி வழியும் உணர்ச்சியோடு குடியரசு நாளையொட்டி துண்டு வெளியீடுகள் வழங்கிய துடிப்புள்ள நான்கு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

### மட்டுநகரில்!

மீன்பாடும் தேனுடான மட்டுநகரில் ஆளுங்கட்சி நீலச்சட்டை ரௌடிகளின் வன்முறை வெறியாட்டங்களுக்கு மத்தியில் ஹர்த்தாலும், பாடசாலைப் பகிஷ்கரிப்பும் வெற்றிகரமாக நடைபெற்றது.

19—5—75 அன்று உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனும் நூற்றுக்கணக்கான வீரத் தமிழ் இளைஞர்களும் பாடசாலை பகிஷ்கரிப்பு, கடையடைப்பு ஹர்த்தால் பிரசுரங்களை பொது மக்களுக்கு விநியோகித்த சமயம் அதைத் தடுக்க முயன்று படுதோல்வி யடைந்த மட்டக்களப்பின் மதனகாமராசன், பொலிசாரை ஏவி கவிஞரை கைதுசெய்வித்து றிமாண்டில் தள்ள வைத்தார். இதைத்தொடர்ந்து மட்டக்களப்பு முழுவதும் சூடு பிறந்தது.

கவிஞர் கைதுசெய்யப்பட்டதும் 20—5—75 அன்று மட்டக்களப்பு முதல்வர் செ. இராசதுரை காசி ஆனந்தன் விநியோகித்த அதே துண்டுப் பிரசுரத்தை மாணவர்கள் இளைஞர்களுடன் சேர்ந்து மட்டுநகரெங்கும் விநியோகித்தார். ஹர்த்தாலில் தீவிரமாக இறங்குமாறும், பாடசாலைகளைப் பகிஷ்கரிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

### ஹர்த்தால் செய்திகள்

மட்டக்களப்பு வரலாறில் இதற்கு முன் என்றுமே நடைபெற்றிருக்காத முறையில் மட்டக்களப்பு மாணவ மாணவிகள் உணர்ச்சி வசப்பட்டவர்களாக பூரண பகிஷ்காரத்தை 21—5—75ல் நடத்தி ரௌடித்தனத்தில் ஈடுபட்ட ராஜன் முகத்தில் கரிபூசினர். பாடசாலைக் கட்டடங்கள் அனைத்தும் மாணவர்களின்றி அழுது வடிந்தது.

ஹர்த்தால் நாளன்று மட்டுநகர் முதல்வர் செ. இராசதுரை, கவிஞர் காசி ஆனந்தன். முன்னுள் மூதவை உறுப்பினர் மு. மாணிக்கம் ஆகியோரது இல்லங்களில் பென்னம் பெரிய கறுப்புக்கொடிகள பறக்கவிடப்பட்டிருந்தன.

நீலச்சட்டைபோட்ட சில ரௌடிகளையும் வைத்துக்கொண்டு கடைகளை திறக்கும்படி மதன காமராஜன் கடைச் சொந்தக்காரர்களை பயமுறுத்திஞராம்!

23—5—75ல் கவிஞர் காசி ஆனந்தனும் அவருடன் கைது செய்யப்பட்ட 10 வீரத் தமிழ் இளைஞர்களும் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். திரு. செ. இராசதுரை பா. உ. வும், சட்டத்தரணி சாம் தம்பிமுத்துவும் இந்த இளைஞர்களை பிணை எடுத்தனர். 30—5—75ல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு இவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

### அக்கரைப்பற்றில்

அக்கரைப்பற்றின் வரலாற்றிலே இதுவரை நடைபெற்றிராதமாபெரும் பாடசாலைப் பகிஷ்கரிப்பும் துக்கதினமும் கடந்த மே 21ம் 22ம் திகதிகளில் அனுஷ்டிக்கப்பட்டது. இளைஞர்கள் இந்தக் ஹர்த்தாலில் கொண்ட அயராமுயற்சியின் காரணமாக அக்கரைப்பற்றிலே நூற்றுக்கு நூறு வீதம் பாடசாலைப் பகிஷ்கரிப்பும்; கடையடைப்பும் வெற்றியளித்ததுடன் மே 22ம் திகதியை தமிழர்கள் அனைவரும் தங்கள்வீடுகளிலேயே இருந்து கொண்டு துக்கதினமாக அனுஷ்டித்தனர்.

21ம் திகதி அதிகாலையிலிருந்தே எல்லா இடங்களிலும் கறுப்புக்கொடிகள் பறக்கத்தொடங்கின. ஆனுல் அவைகளைப் பொலிசார் அகற்றினராயினும் ஒவ்வொருவரது இல்லங்களிலும் கறுப்புக்கொடிகள் உயரப்பறந்து கொண்டிருந்தன. 22ம் திகதியும் அவ்வாறே நடைபெற்றது.

21ம் திகதி அக்கரைப்பற்றுப் பகுதியிலுள்ள சகல பாடசாலைகளும் வெறிச்சோடிக்கிடந்தன. ஆனல் 200க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்விபயிலும் இ. கி. ச. மகா வித்தியாலயத்தில் இரு மாணவிகள் மட்டும் பாடசாலைக்குச் சமூகமளித்திருந்தனர்.

இதனையொட்டி ஒரு மாணவியின் தந்தையும் பாடசாலையினுள் சென்று தனது மகளுடன் சேர்ந்து ஈயடித்துக்கொண்டிருந்ததால் உடனடியாகக் கீழ் வரும் வசனங்களடங்கிய சுவரொட்டிகள் எல்லா இடங்களிலும் ஒட்டிக் காணப்பட்டன.

''பள்ளி மாணவி பரிதவிப்பு! ஒன்றரை மணி வரை ஈயடிப்பு; தந்தையும் மகளும் ஒரேவகுப்பில் கல்விகற்கும் அதிசயம்! 48 வயது முதிய இளைஞர் பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.''

### விநாயகபுரம் திருக்கோவில் தம்பிலுவில்

விநாயகபுரம், திருக்கோவில், தம்பிலுவில் ஆகிய பகுதிகளிலும் ஹர்த்தால் என்றுமில்லாதவாறு விறுவிறுப்புடன் நடைபெற்றது. எல்லா வீடுகளிலும் கறுப்புக்கொடிகள் உயர்த்தப்பட்டிருந்தன. பாடசாலைப் பகிஷ்கரிப்பும், கடையடைப்பும் வெற்றிகரமாக நடைபெற்றன. தமிழரசுக்கட்சி தொண்டர்களில் ஒருவரான திரு. குருநாதபிள்ளை பொலிசாரினுல்விசாரணைக்குட் படுத்தப்பட்டார்.

22—5—75 யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஹர்த்தாவில் கலந்துகொள்ள விநாயகபுரத்திலிருந்து திரு. குருநாதபிள்ளை தலைமையில் தொண்டர்கள் பலர் சென்றிருந்தனர்.

### மன்னரில்

21—5—75ல் மன்னர், பேசாலை, அடம்பன், உயிலங்குளம் முதலான நகரங்களில் உள்ள பாடசாலைகள் கல்லூரிகள், மாணவ மாணவியர் செல்லாமையால் சோபை இழந்து அமைதியாக இருக்கக் காணப்பட்டன. மாணவ மாணவியர் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தமையால் ஆசிரியர்கள் மட்டுமே பாடசாலைகளில் இருந்தனர்.

மன்னார் [illegible] ஆகிய இடங்களில் பெரும் பாலான கடைகள், வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுக் கிடந்தன.

பேசாலையில் அதிகாலை முதலே கடைகள் யாவும் மூடப்பட்டுக் கிடந்தன. பின்னர் பொலிசாரின் பயமுறுத்தல் காரணமாக ஒரு சில கடைகள் திறந்திருக்கக் காணப்பட்டன. இதனுல் சிறிது 'சலசலப்பு' ஏற்பட்டதாயினும் அசம்பாவிதம் எதுவும் இடம்பெறவில்லை.

மன்னர் நகரில் மூடப்பட்டிருந்த ஒரு சில தமிழ்க் கடைகளுக்குக் கல் வீசியது தொடர்பாக திரு. ஜோன் மார்க் எடுத்த உடனடி நடவடிக்கையினுல் மூன்று சிங்களப் பொலிசார் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இது தவிர வேறெவ்வித அசம்பாவிதமும் நிகழவில்லை.

அன்றைய தினம் நகரம் மக்கள் நடமாட்டமின்றி சோபை இழந்து காணப்பட்டது. பஸ் வண்டிகள் பயணிகள் இல்லாமலேயே ஓடித்திரிந்தன.

மன்னர் நகரில் உள்ள அரசு அலுவலகங்களின் பெயர்ப்பலகைகளில் உள்ள தமிழ்ப் பெயர்கள் அழித்திருக்கக் காணப்பட்டன. இதற்கு ''மன்னர்த் தொகுதியில் நடைபெற்றுவரும் சிங்களக் குடியேற்றங்கள் தான் காரணமோவென'' மக்கள் பேசிக்கொள்ளுகின்றுர்கள்.

மதிற்சுவர்களில் தமிழுணர்ச்சிச் சுலோகங்கள் எழுதப்பட்டிருக்கக் காணப்பட்டன.

மாந்தைப் பகுதியிலும் மாந்தைச் சந்தியிலும் கறுப்புக் கொடிகள் பறப்பதனைக் காணக் கூடியதாக இருந்தது.

மன்னுரும் ஈழத் தமிழினத்தின் போராட்டத்தில் தனது பங்கை செலுத்தியது.

### திருகோணமலையில்

திருக்கோணமலையில் தமிழ் சிறுர்கள் பாடசாலைப் பக்கமே திரும்பிப் பார்க்கவில்லை, கடைகள்யாவும் மூடி நகரம் சோபையிழந்து காட்சியளித்தது மூதூர் பாராளுமன்ற உறுப்பினர், திரு. தங்கத்துரையும், திரு. கமலநேசனும் தங்கள் வீட்டில் உயர்ந்த கம்பத்தில் கூட்டணிக்கொடியையும், கறுத்தக்கொடியும் கட்டியிருந்தார்கள்.

பேரவை உறுப்பினர் திரு. பா. நேமிநாதனின் இல்லத்தில் மட்டும் கறுப்புக் கொடியைக் காணுதது இளைஞர்களுக்கு கவலையை அளித்தது.

ஹர்த்தால் துண்டுப்பிரசுரம் கொடுத்ததாக 20-5-75 தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. இ. இராசரத்தினம் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட போதிலும், திரு. நேமிநாதன் பா. உ. வின் தலையீட்டினுல் அவர் உடன் விடுதலை செய்யப்பட்டார்.

### விஸ்வமடுவிலும் பகிஷ்கரிப்பு

தமிழர் கூட்டணியின் குடியரசு தினப் பகிஷ்கரிப்புக் கோரிக்கைக்கு இணங்க விஷ்வமடுவில் சகல வர்த்தக தொழில் நிலையங்களும் கடையடைப்பு செய்தன. தர்மபுரம வித்தியாலயமும் மாணவர் இன்றி வெறிச்சோடிக் கிடந்தது. கடைபூட்டின் மா வழங்கப்படமாட்டாது என்ற கரைச்சி வடக்கு பா. நோ. கூ. சங்கத்தலைவரின் பயமுறுத்தல் இங்கும் பலனளிக்கவில்லை. விஸ்வமடு வீதிகள் அனைத்தும் கறுப்புக்கொடிகளாலும் தனிநாட்டுச் சுலோகங்களாலும் நிறைந்து காணப்பட்டன. இங்கு ஏற்றப்பட்டிருந்த சுறுப்புக்கொடிகளை அகற்ற பொலிசாருக்கு பொது மக்கள் எவரும் ஒத்துழைப்பு வழங்க மறுத்ததால் பொலிசார் தாமே மரங்களில் ஏறி அவற்றை அகற்றநேரிட்டது. மறுநாள் யாழ் நகரில் நடைபெற்ற சட்ட மறுப்பு ஊர்வலத்தில கலந்துகொள்ள இப்பகுதி தமிழர் கூட்டணிக்கிளையில் இருந்து அறுபது பேர் கொண்ட குழு சென்றது.

### கிழவரின் உறுதி!

கிளிநொச்சித்தொகுதியில் ஹர்த்தாலும் பாடசாலைப் பகிஷ்கரிப்பும் வெற்றிகரமாக நடைபெற்றது. ஹர்த்தால் தினத்தன்று ஒரு வண்டியில் கிளிநொச்சியில் தமிழ்க் கிழவர் ஒருவர் தமது மனைவியான கிழவியையும் அழைத்துக்கொண்டு சென்றுகொண்டிருந்தார். 'தந்தை செல்வா வாழ்க, தமிழ் ஈழம் வாழ்க, ஆனந்தசங்கரி வாழ்க, தமிழர் கூட்டணி வாழ்க!' எனும் முழக்கங்களை அந்த முதியவரின் வாய் எழுப்பிக்கொண்டே வந்தது. கிழவரின் இந்தவீர முழக்கம் அங்கு நின்ற அமைச்சர் குமாரசூரியரின் எடுபிடிகள் சிலருக்கு நாராசம் போல உறைத்தது. கிழவரையும் கிழவியையும் வண்டியின் அச்சாணியை கழற்றி கீழே வீழ்த்தி, துவரம தடியால் அடித்து முழக்கங்களை நிறுத்துமாறு அவர்கள் துன்புறுத்தினராம். கிழவரோ அசையவில்லை—அடித்தாலும் நான் தமிழர் உரிமை முழக்கத்தை எழுப்பியே தீருவேன் என்றுகூறியபடி தந்தை செல்வா வாழ்க என்று முழக்கமிட்டார் அக்கிழவர். கிழவருடன்சேர்ந்து கிழவியும் முழங்கவே, மக்கள் கூடினர்; துரோகிகள் ஓட்டம் பிடித்தனர்!

கிளிநொச்சித்தொகுதியிலிருந்து சட்டமறுப்பு ஊர்வலத்தில் 500 தொண்டர்கள் திரு. ஆனந்தசங்கரி தலைமையில் கலந்துகொண்டனர்.

### இணுவில் ப.நோ.சங்கத்தில் கறுப்புக்கொடி!

சுன்னுகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க இணுவில் கிளை இல. 14ல் குடியரசு தினத்தையொட்டி கறுப்புக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. இணுவில் பகுதியில் கறுப்புக்கொடி ஆங்காங்கே கட்டப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரப்படுத்தல்

# தமிழர் கல்வியை உருக்குலைத்த வரலாறு!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இந்நடவடிக்கைகளை அடுத்து, இதுவரை காலமும் பரீட்சையின் இன்றியமையாத பாதகமாக இருந்த செய்ம்முறைப் பரீட்சை இல்லாதொழிக்கப்பட்டது. "மூக்குப்போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழை" என்பது தானே ஆளுவாரின் ஆசை. வெளிவாரிப் பகிரங்கப் பரீட்சைகளின் கோலங்களும் திட்டங்களுமே, கல்லூரிப் போதனையின் நோக்கெல்லையையும் தராதரத்தையும் தீர்மானிக்கின்றன என்ற கல்விமான்களின் கருத்து மதிக்கப்படவில்லை. இலண்டன் பல்கலைக்கழகம் நடாத்திவரும் உயர்தரக் க. பொ. த. பரீட்சையில் செய்ம்முறைப் பரீட்சை இன்னமும் தொடர்ந்து முக்கிய கூறாகவுள்ளதென்பதை எண்ணிப்பார்த்தால் உண்மை உணரவழிவகுக்கும்.

| டிசெம்பர்—1970 பிரவேசங்கள் | பொறியியல் பேராதனை | பொறியியல் கட்டுபெத்தை | பௌதிக விஞ்ஞானம் (4 பல்கலைக்கழகங்களும் சேர்த்து) | மருத்துவம் (கொழும்பும் பேராதனையும்) | விலங்கு மருத்துவம் (பேராதனை) |
|---|---|---|---|---|---|
| சிங்களம் தகுதி பெறற்கான புள்ளி ... | 227:56% | 212:53% | 183:46% | 229:46% | 181:45% |
| பிரவேசம் பெற்றோரின் எண்ணிக்கை ... | 86:59% | 60:53% | 178:66% | 137:57% | 15:75% |
| தமிழ் தகுதி பெறற்கான புள்ளி ... | 250:63% | 232:58% | 204:51% | 250:63% | 206:52% |
| பிரவேசம் பெற்றோரின் எண்ணிக்கை ... | 60:41% | 53:47% | 92:34% | 103:43% | 05:25% |
| தமிழ் மாணவர் அதிகப்படியாகப் பெறவேண்டிய புள்ளிகள் ... | 23 | 20 | 21 | 21 | 25 |
| மேன் மிகையாகப் பிரவேசம் பெற்ற சிங்களவரின் எண்ணிக்கை ... | 26 | 07 | 86 | 34 | 10 |

இதனைச் செய்வதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் இப்பரீட்சையோடு பின்னிப்பிணைந்திருந்த "நேர்முகப் பரீட்சைக்கு" முழுக்குப்போடப்பட்டது. இந்தச் "சீர்திருத்தங்களின்" கேட்டு விளைவுகளை நாம் இப்போது நாளும் பொழுதும் அனுபவித்து வருகிறோம். இந்த ஆட்சியாளருக்கு, குறித்த சில சுட்டிலக்கங்களின் நூலாற்றல் முக்கியமாக இருக்கிறதேயொழிய அச்சுட்டிலக்கங்களுக்குரிய மானுடங்களின் தகவு பெரிதாகப்படவில்லை.

தமிழ் மக்கள் பெரிதும் விழையும் சில கற்கைநெறிகள் 1970இல் என்ன விகிதாசாரத்தில் கிடைத்தன என்பதை கீழ்க்காணும் அட்டவணையில் தருகிறோம். புள்ளியோடு சேர்த்துத் தரப்பட்டிருக்கும் நூற்று வீதம் நான்கு பாடங்களுக்கான மொத்தப் புள்ளியாகிய 400இன் நூற்றுவீதமாகும்; இலக்கத்தோடு சேர்த்துத் தரப்பட்டிருக்கும் நூற்று வீதம் சிங்கள தமிழ் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையின் நூற்றுவீதமாகும். பொறியியலுக்கான இரண்டு போதனா பீடங்களுக்குமான பிரவேசங்களையும் எடுத்துப் பார்க்கும்போது 56 வீதம் சிங்களர்க்கும், 44 வீதம் தமிழர்க்கும் என்று ஆகிறது.

போலியாகவும் நெறிப்பிறழ்ச்சியாகவும் இத்தகைய முறையால் தமிழ் மாணவர்களைப் பலிகொடுத்துச் சிங்கள மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் அநியாயம் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகிறது. கீழ்க்காட்டப்படும் அட்டவணையானது, அமைச்சரின் வாதத்தை பொய்பொதிந்த பாசாங்கென நிலைநாட்டுவதோடு அவரது புதுவகைச் சோசலிசத்தின் மீதான அறிதியான குற்றச்சாட்டுமாகும். ●

கட்டுப்பெத்தை வளாகத்திற்கு, 60 சிங்கள மாணவர்கள் அனுமதிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதையும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையை 53 ஆகக் கட்டுப்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்டு, சிங்கள மாணவர்களின் தகுதிக்கான புள்ளிகள் 212 ஆகக் குறைக்கப்பட்டதுடன், தமிழ் மாணவர்களின் தகுதிக்கான புள்ளிகள் 232 ஆக உயர்த்தவும்பட்டன. எனவே, பொதுவாகத் தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களை விடக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள் என்ற முடிவுக்குவர முடியும். இத்தகைய சூழ்நிலையிலான தெரிவானது, சில முதலாந்தரத் தமிழ் மாணவர்களையும், சிங்கள மாணவர்களையும் உள்ளடக்கும்; அத்துடன் முதலாந்தர, இரண்டாந்தர மேல்மட்டத்திலுள்ள தமிழ் மாணவர்களின் இடங்கள் இரண்டாந்தர, மூன்றாந்தர, நான்காந்தரச் சிங்கள மாணவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன. இந்த உண்மையை பரீட்சையின் முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன.

அனுமதிக்கப்பட்ட 60 சிங்கள மாணவருள் 77வீதம் ஆன 46 மாணவர்களே சித்தியடைந்தனர்; ஆயினும் அனுமதிக்கப்பட்ட 53தமிழ் மாணவருள் 89 வீதம் ஆன 47 தமிழ்மாணவர்கள் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் மாணவர்கள் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் மாணவர்களின் இடங்கள் சிங்கள மாணவர்களால் அபகரிக்கப்பட்டதையும், பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்ட அத்தகைய தமிழ் மாணவர்களின் தகுதியும் அறிவும் ஆற்றலும் அபகரித்தோரிலும் மேம்பட்டமைந்ததையும் இச் செய்திகள் உலகிற்கு அம்பலப்படுத்துவதாகும்.

| போதனா பீடம் | போதனா மொழி | 1969 | 1970 டிச. | 1972 ஜன. | 1973 பெப். | 1974 மே. |
|---|---|---|---|---|---|---|
| பொறியியல் | சிங்களம் | 51.7% | 56% | 66 7% | 73.4% | 81.5% |
| | தமிழ் | 48.3 | 44 | 33.3 | 26.6 | 18.5 |
| மருத்துவம் | சிங்களம் | 50.0 | 57 | 58.6 | 62.0 | 72.7 |
| | தமிழ் | 50.0 | 43 | 41.4 | 38.0 | 27.3 |

● (1969 உக்கான பிரவேசங்கள் முன்னைய அரசாங்கம் ஆட்சியிலிருந்தபோது செய்யப்பட்டது. அது, நல்ல காலமாக புள்ளிகளோடு தலையிடவில்லை.)

# தவில் மேதை தெட்சணாமூர்த்தியை இனி என்று காண்போம்?

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுள் இசைத்தமிழை தனது தவில் மூலம் உலக அரங்கில் உயரப் பறக்கவிட்ட பெருமை மறைந்தும் மறையாத மாபெரும் தவில் மன்னன் தெட்சணாமூர்த்தியையே சாரும். கர்நாடக இசையின் தாயகமெனத் துலங்கும் தமிழகத்திலும், அந்த இசை பரந்துள்ள சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் தவில்வாசித்துத் தனக்கென ஓரிடத்தைப் பெற்றுக்கொண்டவர் அவர்.

தவில் என்றால் தெட்சணாமூர்த்தி என்னும் வகையில் தனிப்புகழ் பெற்றுவிளங்கிய அவர் தமது 10வது வயதிலிருந்தே இலங்கை — இந்திய தவில்மேதையாகத் திகழ்ந்த வண்ணை காமாட்சி சுந்தரம் பிள்ளையிடம் முறையாகத் தவில் பயின்று வெகுவிரைவிலே குரு மெச்சி மகிழும்படி சிறந்த வித்துவான் ஆனார்.

ஈழத்தமிழ் அன்னையின் இசைக் கலைச் சக்கரவர்த்தியான அவர் 1960ம் ஆண்டு சென்னை தமிழிசைச்சங்க விழாவில் நாதசுர கலாஜோதி காரக்குறிச்சி அருணசலத்துடன் சரியாசனம் ஏறி இரவு 1-30 மணிவரை ஜமாய்த்ததுடன் நாதசுரத்திற்குத் தவில் பக்கவாத்தியம் என்றிருந்த நிலையை மாற்றித் தனது தவில் இசைக்கு நாதசுரம் பக்கவாத்தியம் என்ற நிலையையும் உருவாக்கி உயர்வடைந்தார். தமிழகத்தின் தலைசிறந்த நாதசுர விற்பன்னர்களாம் ஷேக் சின்ன மௌலானா சாகிப், நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், குளிக்கரை பிச்சையப்பா, சேதுராமன் பொன்னுச்சாமி சகோதரர்கள் ஆகியோருடன் அமர்ந்திருந்து தவில் வாசித்து அவர்களின் புகழை உயர்த்தினார்.

கலையுலகம் கண்டெடுத்த ஒப்பில்லாத் தவில்மன்னன் அவர் 1965ம் ஆண்டு கொழும்புமாநகரிலே நடைபெற்ற ஆடிவேல் விழாவின்போது நாதசுர கான கலாமணி ஷேக்சின்னமௌலானா சாகிப் அவர்களின் கச்சேரிக்குத் தவில் வாசித்து சபையோரின் சபாஷ் வெள்ளத்தை அள்ளிக்கொண்டதை எவருமே மறந்திருக்க முடியாது.

1971ம் ஆண்டு தஞ்சைத் தரணியிலே வீற்றிருந்த காலத்தில் தமிழகத்தின் தலைசிறந்த திவ்விய ஸ்தலங்களாகிய திருச்செந்தூர், மதுரை, இராமேஸ்வரம் போன்ற இடங்களிலெல்லாம் தவில் வாசித்துப் பெருமைகொண்டார். தவில் வாசிப்பதற்கென மேடையில் அமர்ந்து மடிமேல் தவிலை வைத்த மாத்திரத்தே தவிலிலே ஒன்றிவிடும் அவர் கைகளிலே சரஸ்வதி தேவி களிநடம் புரிவதைக் காணலாம்.

அப்படியான ஓர் அலாதியான தவில் வாசிப்பாளனை, வேறு எவராலுமே கிட்ட முடியாத அளவு வித்துவத் தன்மை வாய்ந்த ஒப்பற்ற கலைஞனை இழந்து தமிழ் ஈழம் தவிக்கிறது. இத்தகைய மேதையை இனி என்று காண்போம்.

—நாக. சாந்தன்.

## யாழ்மாநகர 6ம் வட்டாரம் தமிழர் கூட்டணி கிளை!

யாழ் மாநகர தமிழர் கூட்டணியின் 6ம் வட்டாரக் கிளையின் புதிய நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர் — திரு. கா. சி. நாகலிங்கம், துணைத் தலைவர் — ச. செபஸ்தியாம்பிள்ளை, செயலாளர் — ம. யோகேஸ்வரன், துணைச்செயலாளர் — இ. யோகேஸ்வரன் பொருளாளர் — ச தவசீலன், துணைப்பொருளாளர் — பா. அமிர்தநாயகம் செயற்குழு உறுப்பினர்கள் — திருவாளர்கள்: த. சிவப்பிரகாசம் நா. ஐயாத்துரை, மாணிக்கம் கணபதிப்பிள்ளை, ஆர். கனகரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# அரசியல் மடல்...

3-ம் பக்கத் தொடர்

பாடாக இயங்கக்கூடியவர்கள்; அதேவேளை யில் எந்தவித தியாகத்துக்கும் அவர்கள் தயாராக இருப்பவர்கள்; எந்த விளைவை யும் சந்தித்திட முன்னிற்பவர்கள்; என்கிற இரண்டுபாரிய உண்மைகள் மே22 — சட்ட மறுப்பு நிகழ்ச்சிகள் மூலம் நிரூபிக்கப் பட்டு விட்டன!

அதே நேரத்தில் நம்முடைய தமி ழர் கூட்டணித் தலைமையும் ஒன்றை உணரவேண்டும்! கட்டுப்பாடும், பொறுப்புணர்வும் இயக்கத்துக்கு அவ சியம் தேவைதான்! ஆனல் கட்டுப்பாடு பொறுப்புணர்வு ஆகிய சொற்களுக்கு "கோழைத்தனம்" என்கிற அர்த் தத்தை மாற்ருர்தரும் நிலைமைதோன் றுவதற்கு நாம் இடமளித்திடக்கூடாது! துடித்தெழும் தமிழ் இளைஞர்களின் உணர்ச்சி சோர்ந்து போகுமளவுக்கு நாம் விட்டு விடமுடியாது!

மே22 சட்டமறுப்பு நிகழ்ச்சியில் பெற்ற அனுபவங்களைக்கொண்டு—தமி ழர் கூட்டணித்தலைமை இளைஞர்களின் உள்ளங்களையும் தழுவி — முறையான அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு ஒரு நீண்ட தொடர்ச்சியான சட்டமறுப்பு இயக்கத்துக்கு திட்டங்கள் தீட்டி மிக விரைவில் தன்னைத்தயாராக்க வேண் டும்!

நண்பா, மே 22 — சட்டமறுப்பில் பங்கேற்று — தங்கள் இரத்தத்தை கொட்டி அதனைக்கொண்டு விடுதலை வரலாற்றில் புதிய தியாக அத்தியாய மொன்றை எழுதிட ஆசைகொண்டு பல்வேறு ஊர்களிலிருந்தும் ஆர்வ முடன் வந்திருந்த தம்பிகள் பல்லாயி ரக்கணக்கானேர் — தமது இந்த ஆசை மே 22 சட்டமறுப்பின்போது நிறை வேறமுடியாமல்போய்விட்டதே என்று வெம்பி வெதும்பி வெய்துயிர்த்து கொதித்தெழுந்த தம்பியர் பலர்! சிலர் வந்து என்னுடன் ஊடினர்; நீங்கள் எழுதி எங்களையெல்லாம் உணர்ச்சி வசப்படுத்திவிட்டீர்களே; இங்கே போராட்டத்தில் எங்களுக்கு தியாகம் செய்யும் வாய்ப்பு ஏற்படுத்தித்தர வில்லையே—சும்மா வந்து செல்லவா இங்கு வந்தோம்? — என்று ஒருவகை யான உளக்கொதிப்போடும் உரிமை யோடும் என்னுடன் பல தம்பியர் நொந்துகொண்டனர்!

அந்தத் தம்பிகளுக்கு நான் சொல்லக்கூடியதெல்லாம் — அவர் களைப் போலவே — அவர்களுடன் சேர்ந்து பொலிசாரின் அடக்குமுறை க்கு என்னைப் பலி தர நானும் தயா ராக அவர்களுடன் அங்கு இருந்தேன் என்பதுதான்!

ஆனலும்—நம் இளைஞர்கள் எது விதத்திலும் உள்ளம் சோர்ந்துவிடக் கூடாது; நமது போராட்டம் ஏதோ ஒரு நாளுடன் முடிந்துவிடுவதல்ல— இன்னும் எத்தனையோ முக்கியமான கட்டங்களை நாம் நமது விடுதலைப் பய ணத்தில் நிச்சயம் சந்திக்கத்தான் போகிருேம்! அப்போது நம் ஆசை தீர விடுதலைத் தெய்வத்துக்கு நம்மை நாம் அர்ப்பணிப்போம் என்கிற உணர் வுடன் தொடர்ந்தும் இலட்சியத்தை நோக்கி வீர நடை போடுவோம்!

உன் அன்புத் தோழன்,

கோவை-மகேசன்


**கெப்பிட்டி**

6-வது வாரம்



சிவகுமார், விஜயகுமார், கே. ஏ. தங்கவேலு, வீரராகவன், ஜெயசித்திரா, விதுபாலா, மனோரமா ஆகியோர் நடித்த

**பொண்ணுக்கு தங்க மனசு**

டைரக்ஷன்: தேவராஜ்—மோகன்.

**செல்லமகால் 7-வது ஜனத்திரள் வாரம்**

நடிகர்கள்:

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.
நாகேஷ் - அசோகன் - சுந்தரராஜன்,
தேங்காய் சீனிவாசன் - எஸ் வி. ராமதாஸ்,
வி. கோபாலகிருஷ்ணன்-ஜெஸ்டின்-சாண்டோ,
எம். எம். ஏ. சின்னப்பா தேவர்.

நடிகைகள்:

கே. ஆர். விஜயா,
குமாரி சச்சு - ராதிகா - கோவை காமாட்சி
இந்திரா மற்றும் தேவர் பிலிம்ஸ் குழுவினர்.

டைரக்ஷன்: எம். ஏ. திருமுகம்

தேவர் பிலிம்ஸ்

**நல்ல நேரம்**

(ஈஸ்ட்மென் கலர்)



8-வது வெற்றி வாரம்!

**கிங்ஸ்லி — பிளாஸா — வெலிங்டன்** யாழ் நகர்

வீட்டுக்காக மட்டும் வாழாமல், நாட்டுக்காகவும் வாழ்ந்த, ஒரு நாடக நடிகரின் வரலாறுதான்



நடிகர் திலகம் சிவாஜி கணேசன், உஷா நந்தினி ஸ்ரீகாந்த், ஜெயா, நம்பியார். வி. கே. ராமசாமி, மனோரமா, சசிகுமார், டி.கே. பகவதி, குமாரி பத்மினி

—நடித்த—

சித்ரமாலா கம்பைன்ஸ் அளிக்கும் குகநாதனின்

**ராஜபார்ட் ரங்கதுரை**

(ஈஸ்ட்மென் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் [illegible] கொழும்பு பண்டாரநாயகா வீதி 194 ஏ. இலக்கத்தில் 1975ம் வருடம் மே மாதம் 1-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.